[illegible]

O2,1M51K5,P
N20

179243

4

உ


கடவுள் துணை.

# பக்தலீலாமிர்த

## திருப்புகழ் காவடிச்சிந்து.

763
1.21

OFFICE OF ... 18 FEB 1921



க. சண்முக முதலியாரவர்களால்
இயற்றப்பட்டது.

பூ. து. மாசிலாமணிமுதலியாரால்
தமது
சுந்தர விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1920.
...ிஸ்தர் செய்யப்பட்டது. அணா 1

O, 1 MSK5,ம்
N20.
179243

உ

கடவுள் துணை.

# பக்தலீலாமிர்த

## திருப்புகழ் காவடிச்சிந்து.

763
1.2.1
OFFICE OF ... 18 FEB 1921 MADRAS

இது,

கோரக்கோட்டை.

ப. வடிவேலு செட்டியாரவர்களால்,

இயற்றப்பட்டது.

க. சண்முகமுதலியாரவர்களால்

பூ. சு. துளசிங்க முதலியார் குமாரர்

பூ. து. மாசிலாமணி முதலியாரவர்களால்

தமது

சுந்தர விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

*Registered Copy Right.*

1920

நெ 3-25. வல்லம் பங்காருசெட்டிவீதி வேப்பேரி போஸ்டு. மதரூஸ்.

6518
ஏ)(
179243
சென்னை-600.008

உ

கடவுள்துணை.

# பக்தலீலாமிர்த

## திருப்புகழ் காவடிச்சிந்து.

### விநாயகர் துதி.

கலி விருத்தம்.

சத்திசி வன்றிரு மான்மலற் றேவனைய்
நித்திய தாரக நீட்கரு ணைமுக
வத்தியு நாற்கர மானத யபர
சித்திவி நாயகன் சேவடி போற்றுவாம்

திருத்தாண்டக ராகம்.

எண்சீர்கழி னெடிலடி யாசிரியவிருத்தம்.

திருவுருவே திகழொளியே தேனே வானோர்
சித்திரையே நித்தியனே தெளிவே யுள்ளக்
குருவருளே குணக்கடலே கோவே யின்பக்
குன்றமுதே யுயர்நிலையின் குறியே தொண்டர்
பெருநிதியே மறையொலியே பிறங்கு மோனப்
பெருமானே யுனைக்காணப் பேதை வேண்டத்
தருசிவமே வரமருளச் சடுதிவாவா
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே. 1

மண்ணினிடை கசடரிட மதியிற் கூடி
மங்கைமயல் மதுவெறியும் மகிழ்ந்துச் செய்து
எண்ணரிய தனவிரய மேற்றிப் பின்னால்
ஏங்குகிறேன் றாங்குவர்க ளில்லா தாலே

அண்ணன்றம்பி ருய்தந்தை யனைவர் பற்றும்
யற்றுவிட நினதுபற்றே யாட்சிக் கொண்டேன்
தண்முகமா யெனைகாக்கச் சடுதிவாவா
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே. 2

மதியைநினைத் தழுவேனோ மண்ணின் மீது
மாதர்சேய் தனைநினைத்து மயங்குவேனோ
விதியைநினைத் தழுவேனோ வியப்பிப் பேனோ
விலக்கவொண்ணா வறுமையிடம் விளம்புவேனோ
கதியைநினைத் தழுவேனோ கண்ணின் னீரை
கலகலென விடுவேனோ கலங்குவேனோ
ததியிதுவே யெனைகாக்கச் சடுதி வாவா
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே 3

பந்தமெனும் வினைசூழப் பாரின் மீது
பலகுடும்பர் போலின்றி பாழாம் நெஞ்சை
விந்தையைப்போல் வீணாக்கி விள்ளுக் காலே
விரும்புந்துணை காணாது விழலாய் நின்று
சிந்தைநொந்தும் பெருவறுமை சீறிப் பாய
சிவமென்று மரியென்றுந் தேடி யுன்பாற்
றந்தையேயான் வந்தடைந்தேன் றருணங் காவாய்
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே. 4

மங்கையுமை சங்கரனும் மாதா தந்தை
வனக்குரவ வள்ளிமண வாளன் றம்பி
எங்களன்னை சித்திபுத்தி யிசைந்த தார
மெண்ணரிய பத்தர்குழா மிலங்குசேயர்
துங்கமான் மாமனுமாய்ச் சூழ்ந் துனக்கே
துலங்கலியோ யானுமொரு துரும்பாஞ் சேயன்
சங்கையின்றி காத்திடுக தயவாய் வாவா
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே 5

ஆணிலும்பெண் ணலியிலுமிவ் வடிமைப் போன்று
ரார்தானுண் டிப்புவியி லாயும் வேளை
காணிலனான் மனக்கலங்கி கதற லானேன்
கன்னெஞ்சோ வுன்மனது கரையொ ணாதோ

வீணிலேமுன் கழித்ததினம் வருமோ கூறாய்
வித்தகனே சித்துடையோய் விரும்பு வாற்கு
தாணுவேநீ ருதவிசெய தயவாய் வாருந்
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே. 6

பலகாலுந் துன்புருமிப் பாவி யேற்குப்
பாலித்தால் நின்கருணை பழுது றாதே
யிலகிடுந்தாய் சித்திபுத்தி யெளியேன் மீது
யேனளித்தா யென்றுன்னை யேசி டார்கள்
பலனுதவுங் கடலென்றே பரிந்து வந்தேன்
பகையாளி யைப்போல பார்த்தி டாதே
தலம்புகழுந் தயவுடையாய்த் தருணங் காவாய்
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே. 7

உனதடிசேர் பத்தரெல்லா மோங்கி நின்று
லொருவனும்யான் வேறுபட வுண்டோ நீதி
மனமுனக்கு மிரும்போதான் மண்ணோ கல்லோ
மாநிலத்தோ ரேசாரோ மலர்ந்த நின்றன்
கனந்தனக்கு நிந்தையென கவனி யாயோ
கபடமன மில்லாத கடவுளே நற்
றனமருள விருநிதியோய் சடுதி வாவா
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே. 8

கத்திகத்தி நாவுலர்ந்து கண்ணீ ரேழு
கடலெனவே யுதிர்ந்திட நின் கண்ணே கண்டு
சித்திதரா விட்டாலுந் தெளிந்தி லங்குந்
திருவுளமுந் தாளாது சேயைக் காக்கு
மத்திமுக நாற்கரமு மணைத்துக் கொள்ளு
மறிவாய்நீ யறிவாய்நீ யறிவாய் கெஞ்சுந்
தந்தையையுஞ் சோரவிடேல் சடுதி வாவா
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே. 9

திருவேண்டும் புகழ்வேண்டுஞ் சிறப்பு வேண்டுஞ்
சீலமொடு நல்வாழ்வின் றிண்ணம் வேண்டுங்
குருவருளாய் நீயுவந்து கூட வேண்டுங்
குஞ்சரநின் புகழ்தினமே கூற வேண்டு

மருநோய்கள் கெடவேண்டு மாயுள் வேண்டு
மன்னை தந்தை நீயென்றிங் கடைந்தே னின்று
தருகோவே யிதுசமயந் தருக வேண்டுந்
தாரகமே விநாயகனே தனிமைத் தேவே.

---

## பதினான்கு சீர்கழி னெடிலடி இரட்டையாசிரிய விருத்தம்

சீரிலகு மோங்கார பிரணவ சொரூபமுயர்
சிவசத்தி வெகுரூபமாய்
சிவனுமா யரியுமாய்ச் சதுமுகப் பிரமனாய்த்
தேவர்முதல் மனிதவுருவா
யேரிலகு மருவமா யுருவமா யருவுருவ
மெட்டாத ஞானநிலையாய்
யெழுதரிய மறையினொலி பிரமமாஞ் சுயம்புநீ
யேற்றடிப ருய்யுமாறு
பேரிலகு முற்றறிவு மெல்லையில் லாவின்பம் 179243
பிறங்கிடு மியற்கையறிவும்
பேரரு ளுடைமையொடு வரம்பிலா வாற்றலும்
பேசுதம்வய முடைமையும்
ஆறுமுக மாகவும் மற்றகல் யாணகுண
மமையுமற் றவையமாயும்
அழகுபதி னொருருத்தி ரர்தோமரங் கொடியும்வாள்
அதிகிரண குலிசமாக
கூரிலகு மம்பாக வங்குசமு மணியாக
கோலதாமரை தண்டமாய்
கோர்வைமணி வில்லாக மழுவாக இச்சையுடன்
கூடுஞான ங்கிரியைகள்
நேரிலகு முச்சத்தி மூன்றிதழின் வேலாக
நினதுபன் னிருகையிலும்
நேர்த்திமிக வேகொண்டு நாதமதை கொடியாக்கி
நிலைபெறுகு விந்துமயிலில்
பாரிலகு சிற்சத்தி யும்பரா சத்திகளை
பழதெய்வயா னைவள்ளி
பாவையாய்க் கொண்டுகிரி சிகரமிசை விளையாடு
பாலனாய் வேண்டுவோர்க்கு

தாரிலக வந்துதரி சனமருளுந் தேவஷம்
சரஹணபவன் வருகவே
தகைமைபெறு பழநிமலை நடனமயில் வேல்முருக
தண்டாயுதன் வருகவே.

---

சந்த்ராசரசமதலோலா என்ற வர்னமேட்டு.

கந்தாகருணைவடி வேலா-சிவசங்
கரிமகிழும் பாலா-தெய்வ
யானைவள்ளி லோலா
யடியரநு கூலா கந்

சும்மாயிருப்பதேன் நீரும்-இன்னும்
சோதியாமல் காரும்-என்
துயரகல வாரும்
கிருபைக்கண்ணால் பாரும் கந்

எந்தநாளுமண் மேலே-மிடி
யிடர்படுவ தாலே-தான்
வந்தேநின் பாலே
வளங்காட்டுவாய் மாலே கந்

பொறுக்கமுடியாதிந்தப் பாரம்-இதுன்
புகழுக்கேபெறுங் கோரம்-தநி
புரிதயையின் னேரம்
பெறுவன்மன தீரம் கந்

வேதமறையும்பிரக் யாதா-வடி
வேலன்பணியும் பாதா-மன
மேதுனக்கு சூதா
எந்தைஜெக நாதா கந்

தேள்ளுதமிழுக்குதவுசீலன் என்ற வர்னமேட்டு.

வேதம்புகழ் சத்திசிவ பாலா-டி
வேலன்பணியுங்குண லோலா-மன
வீடதனில் நாடுவர்க்கு நீடுவினை யோடவருள்
வித்தா பரி சுத்தா

காகலானவள்ளிதெய்வ யானை-மருவுங்
கந்தனுக்குமுன்னுதித்த நின்னை-தினங்
கண்டுமனந் தொண்டுபுரி யண்டரொடு மண்டலர்க்குங்
கதியே பெறு நிதியே

சித்திபுத்திமைமருவுந் தோளா-பாடுஞ்
சிந்திசைக்கருளுங்கண் ணாளா-கொடுந்
தீதன்கய சூரன்விப ரீதமாகப் போர்புரிந்த
தீரா மிகு வீரா

நித்தம்பெருச்சாளியேறு பாதா-கரு
நிறத்தையடைந்தகண நாதா-உனை
நிந்தையின்றி சிந்தையினில் வந்தித்தேன்பற் பந்தமெல்லாம்
நீங்க அரு ளோங்க

---

கஜமுகநாதா கதியருளும் என்ற வர்னமெட்டு.

ஓம் சரஹணபவனே மறை சாற்றிடுமாதவனே ஹரஹர
வர மருள் திகழ் பழநிபுரியாண்டவனே

கங்கையருள்சேயே சிவன் காதிலுரைவாயே ஹரஹர
பொங்கு ஞானந் தங்கு துங்கப் பூரணமாங்கலையே

கூர்வடிவேலவனே தேவர் கோரவருள்பவனே ஹரஹர
காரார் சூரர் மாள வேல்விடு காங்கேயமேலவனே

தண்டாயுதக்கையனேகந்த சாமிமுருகையனேஹரஹர
பண்டு கும்ப முனிக் கருள் பன்னிருகையையனே

கானமயிலோனே சேவல் காட்டுங்கொடியோனே ஹர
மோன நிலை யானவனே மூலமாய்நின்றவனே

தெள்ளுசிவமணியே திருமான்மருகக்கனியேஹரஹர
வள்ளி தெய்வ யானை மண வாளச்சிரோமணியே

ஓராறுமுகனே மனத் துள்ளுறையுங்குகனே ஹரஹர
தீரா வீரா சூரா வாராய் சிங்காரச்சண்முகனே

ஞானதயாநிதியே வொளி நாட்டியவான்மதியே ஹர
தேனே பாகே தெளிவே சுவையே தேவசேனாபதியே

மந்த்ரசடாட்சரனே வடிவேலனைக்காப்பவனே ஹர
அந்த முள்ள சிந்தை வர மருளுங்கிருபாகரனே

79243

அடிமைக்கிரங்கியருள் என்ற வர்ணமெட்டு

ஓம் சரஹணபவ வடிவேலா-அதி
யோகைப்பெறுமுருக வடிவேலா
வாம்பல்வளப்பகிரி வடிவேலா-இப்போ
வருவாய்பழநிமலை வடிவேலா

ஓம் ரஹணபவச வடிவேலா-மிக்க
வொள்ளியதெள்ளமிர்த வடிவேலா
வாமியருளுங்குக வடிவேலா-இப்போ
வருவாய்பழநிமலை வடிவேலா

ஓம் ஹணபவசர வடிவேலா-மிக
ஓங்கலுடையகந்த வடிவேலா
வாமதேவனருளும் வடிவேலா-இப்போ
வருவாய்பழநிமலை வடிவேலா

ஓம் ணபவசரஹ வடிவேலா-அய்யா
ஓங்காரமெய்ப்பொருளே வடிவேலா
வாமனன் மருக வடிவேலா-இப்போ
வருவாய்ப்பழநிமலை வடிவேலா

ஓம் பவசரஹண வடிவேலா-கொடும்
பாவந்தனையொழியும் வடிவேலா
வந்தித்துவேண்டுகிறேன் வடிவேலா-இப்போ
வருவாய்ப்பழநிமலை வடிவேலா

ஓம் வசரஹணபவ வடிவேலா-உனை
வந்திக்கவேயருளும் வடிவேலா
வேவுமனந்தணிய வடிவேலா-இப்போ
வருவாய்பழநிமலை வடிவேலா

## பக்தலீலாமிர்த

## திருப்புகழ் காவடிச்சிந்து

## முற்றிற்று.

# நூதன புத்தக விளம்பரம்.

## ஸ்திரீபுருஷ லக்ஷணக்குறி சாஸ்திரம்.

இந்த ஸ்திரீ புருஷ லக்ஷணக்குறி சாஸ்திரமென்னும் கைகண்ட சாஸ்திரமானது உள்ளங்கால் முதற்கொண்டு உச்சிவரையிலுமுண்டான அவயவங்களின் உருப்புகள் ஒவ்வொன்றிற் சம்இமாதிரியிருந்தால் இன்னின்ன பலன் என்றும் அஸ்தமாகிய கைகளின்ரேகையின் அஸ்தக்குறிப்பும், பிள்ளை, பெண், தாரம், இத்தனையென்றுவிபரமாக ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் வெவ்வேறு தெரிந்துக்கொள்ளும்படிக்கு புதைநிதியம்போல் கிடைதது யாவருக்கும் உபயோகமாகும்படி திக்கு கடிதத்தில் அச்சிட்டிருககிறது.

புத்தகம் 1-க்கு விலை அணா 0 12 0

## அனுபோக ஜாதகரகசியம்

இந்த அனுபோக ஜாதகரகசியமென்னும் கைகண்ட சாஸ்திரமானது புதை நிதியம்போல் கிடைதது அச்சிட்டரங்கேற்றி யாவரும் கையாண்டு வருமாறு வெளிவந்திருக்கின்றமையால் இந்நூலைக்கண்ணுற்ற நண்பர்களியாவரும் சோதிடரை விரும்பாமல் ஜாதகம் குறிப்பு, லக்கினம், கோசாரபலன் முதலிய எல்லா கனமைதன்மைகளையும தாங்களே அறிந்துக் கொள்ளலாம் அன்றியும் ஸ்திரீகள் ஜாதகமும் அடங்கியிருக்கின்றது உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு புல்பயிண்டு செயதிருக்கிறது இதன விலை அணா 0 12 0

## மஸ்தான் சாகிபு பாடல்

மூலமும்-உரையும்.

மகாமகிமைபொருந்திய மஸ்தான் சாகிபு பாடலுக்கு மூலமும் பொழிப்புரையும் இல்லாததினால் சிலபெரியோர்கள் கேட்டுக்கொண்டதினால் உரையெழுதி உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டிருக்கிறேன் இதைவாங்கி வாசிப்போர்கள் சரியை கிரியை யோகம் ஞானம் முதலியவைகளையும் சன்மார்க்கத்தையும் சர்வேஸ்வரனிடத்துள்ள அன்பையும் பெறுவார்கள் ஆனதுபற்றி ஒவ்வொரு மதஸ்தரும் இதை வாங்கிப்படிக்கவேண்டியது முக்கியம்

கிளேஸ்கடிதம் உயர்ந்ததிப்பு புல் காலிகோபயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூபா 3 0 0

---

பூ. து. மாசிலாமணி முதலியார்

சுந்தரவிலாசம் பிரஸ்

நெ. 3-25, வல்லம் பங்காருசெட்டி வீதி வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

20A
15-B